

அரியலூர் மாவட்டம் செந்துறையில் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு குன்னம் தொகுதி, செந்துறை பேருந்து நிலையம் அருகே உள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், திராவிடர் கழக மாவட்ட தலைவர் நீலமேகம், வி.சி.க. ஒன்றியச் செயலாளர் தலித்வெற்றி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

# நெல்லையில் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் சீரமைப்புப் பணி!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

நெல்லை, டிச. 26 -

தென் மாவட்டங்களான திருநெல்வேலி,தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17.12 .2003 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த கனமழையினால் விவசாய நிலங்கள்,பயிர்கள் உள்ளிட்டவை பெரிதும் சேதம் அடைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க அதிகன மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகளை அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பொதுமக்களுக்கு வேண்டிய உதவிகளையும்,நிவாரண பொருட்களையும் வழங்கி வருகின்றனர்.

அதன்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தூத்துக்குடி மாவட்டத்தில் அதி கனமழையினால் பாதிக்கப்பட்ட உவரி,ஏரல், திருவைகுண்டம் ஆகிய பகுதிகளில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம் நெல்லை மாவட்டம் தருவை பாலக்கால் கால்வாய் உடைப்பினால் சேதம் அடைந்த விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் வேளாண்மை ஆணையாளர் முனைவர் சுப்பிரமணியன், தோட்டக்கலை இயக்குனர் பிருந்தா தேவி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தென் மாவட்டங்களை பொருத்தவரையில் சுமார் 1லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் விலை நிலங்கள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நெல் வாழை சிறு தானியங்கள் பயிரிட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது மேலும் விவசாய பெருமக்கள் தங்கள் பாதிக்கப்பட்ட வல்லினங்களுக்கு இழப்பீடு நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். துறை சார்ந்த அலுவலர்களால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.விரைவில் இழப்பீடு நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,வி.கே. புரம் நகர செயலாளர் கணேசன், நெல்லை வேளாண்மை இணை இயக்குனர் முருகானந்தம், துணை இயக்குனர் கிருஷ்ணகுமார், வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கிய அமல ஜெயன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சியில் ரூ.1.12 கோடி மதிப்பீட்டில்

# ஏழைப் பெண்களின் திருமண நிதியுதவி - தாலிக்கு தங்கம் வழங்கல்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 26 -

செஞ்சியில் ரூ1.12 கோடி மதிப்பீட்டில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவி, தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் செஞ்சி, வல்லம், மேல்மலையனூர் ஒன்றியங்களைச் சேர்ந்த ஏழைப் பெண்களின் திருமணத் திற்கு நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சிவிஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட சமூக நலன் அலுவலர்ராஜம்மாள் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு படித்த 132 ஏழைப் பெண்களுக்கு 1 கோடியே 12 லட்சத்து 7000 ரூபாய் மதிப்பீட்டில் திருமண நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இவர்களை ஒருங்கிணைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுடைய வாழ்வாதாரம் உயர வேண்டும் என்பதற்காக பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் பெண்கள் பட்டப்படிப்பு படிக்க வேண்டும், உயர்கல்வி அடைய வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கியும், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் குடும்பப் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக முதலமைச்சர் திகழ்வதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் சப் கலெக்டர் திவ்யன்சு நிகம்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,துணைச் சேர்மன் ஜெயபாலன்,வட்டாட்சியர் ஏழுமலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீத்தாலட்சுமி, வெங்கடசுப்பிரமணியன், ஆனந்த தாஸ், சிலம்பு செல்வன், குலோத்துங்கன், சரவணகுமார், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்கஏழுமலை, அகிலா பார்த்திபன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கிள்ளியூர் தெற்கில் மதநல்லிணக்க கிறிஸ்துமஸ் விழா!

### ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, டிச. 25 -

அமைச்சரும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளருமான மனோதங்கராஜ் வழிகாட்டுதலில், கிள்ளியூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் மதநல்லிணக்க கிறிஸ்மஸ் விழா மாவட்ட கழக அலுவலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒன்றிய மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ்,மாவட்ட அவைதலைவர் மரியசிசுகுமார்,மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஜூட் தேவ் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கோபால் சிறப்புரை ஆற்றி தீர்மானங்களை வாசித்தார்.

தமிழ்நாட்டின் தலைநகரத்தையும் தென்மாவட்டங்களையும் உலுக்கிய பெருமழை வெள்ளத்தின் கோரப்பிடியிலிருந்து மக்களைக் காத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் கூறிக்கொள்கிறோம். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்க கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் சார்பில் வாழ்த்துகிறோம்.

தமிழர் என்று கூறிக் கொண்டு தமிழ்நாடு முதல்வர் மீதும், கழக அரசின் மீதும் புதுடெல்லியிலிருந்து வெறுப்பை உமிழ்ந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலைமைசெயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ் கிறிஸ்மஸ் பரிசுகளை வழங்கினார்.

விழாவில்மாவட்டதுணை அமைப்பாளர் ராஜ், ஒன்றிய துணை அமைப்பாளர் துரைராஜ், பொருளாளர் தங்கதுரை, பேரூர் செயலாளர்கள் சத்தியராஜ், மனோஜ்,கான், ஜெனோ, ததேயூஸ், விவேகானந்தன் மற்றும் பேரூர், கிளை கழக நிர்வாகிகள் மகளிர்கள் பொதுமக்கள் என திரளான மக்கள் கலந்து கொண்டனர்



சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி மன்ற தலைவர் , துணைத் தலைவர் ,மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஏற்பாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. இதில் ஆத்தூர் நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், நகராட்சி மன்ற தலைவர் நிர்மலா பபிதா, நகராட்சி மன்ற துணை தலைவர் கவிதா ஸ்ரீராம் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக /நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களை வழங்கினார். உடன் திருமதி.மா.செல்வி, கே.கே.செல்லபாண்டியன், முருகேசன், திருமதி.மேகலாமுத்து, அழகு (ஏ) சிதம்பரம், மோ.மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், டிச. 26 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் 3123 மாணவர்களுக்கும், 3490 மாணவியர்களுக்கும் என மொத்தம் ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் 6613 விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் இன்றைய தினம் அரியலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப் பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு செலவுகளை மேற்கொண்டு கல்வி பயிலுகின்றனர். அதே சமயம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயண அட்டை, சீருடை, பாடப்புத்தகங்கள் உள்ளிட்டவை அவர்களது கல்வியை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப் பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நம்முடைய மாணவர்களின் கல்வியை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ் மக்களின் அறிவு கண்ணை திறப்பதற்கு தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் பல்வேறு திட்டங்களுக்கு வழி வகுத்துள்ளார்கள். அந்தவகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கல்லூரிகளின் எண்ணிக்கையை உயர்த்தியதன் காரணமாகத்தான் இன்றையதினம் தமிழ்நாட்டில் உயர் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்திய ஒன்றிய அரசு இந்தியா முழுவதும் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை 50 சதவீதமாக உயர்த்த தற்பொழுது இலக்கு நிர்ணயித்துள்ளது ஆனால் நம்முடைய தமிழகத்தில் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த சிறப்பான திட்டங்களே ஆகும்.

மற்ற மாநிலங்களில் உயர்கல்வி பயிலுபவர்களின் எண்ணிக்கை 27 சதவீதமாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் 50 சதவீதமாக உள்ளது. இந்த எண்ணிக்கையை இன்னும் உயர்த்த வேண்டும் குறிப்பாக பெண்கள் கல்வியினை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவியர்களுக்கு அவர்கள் கல்லூரி செல்லும் போது மாதம் ரூ.1,000/ உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளார். கிராமப் புறங்களில் உள்ள ஏழை, எளிய பெற்றோர்களின் பொருளாதார நிலையை உணர்ந்து அவர்களது சூழலை கருத்தில்கொண்டு அவர்களது பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் காரணமாக தமிழ்நாட்டில் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 85 சதவீதமாக மாறும் நிலை ஏற்படும். மேலும் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் 50 சதவீத உயர்கல்வியை பெறும் போது நம்முடைய தமிழ்நாட்டில் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 85 சதவீதமாக இருக்கும்.

மேலும், படித்த இளைஞர்கள் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பை பெறும் வகையில் நான் முதல்வன் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திறன்பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெறுவதற்கு உலக அளவில் உள்ள பெரும் முதலீட்டாளர்களை தமிழகம் வரவழைத்து அவர்கள் மூலமாக பல்வேறு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டு வருகிறது. அந்த வகையில் பெரம்பலூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்ட காலணி தயாரிக்கும் தொழிற்சாலை இந்த ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் 4000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நம்முடைய மாணவர்கள் மாநில அளவில் மட்டுமல்ல, ஒலிம்பிக் அளவிலான போட்டிகளிலும் பங்கு பெற்று வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில்பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன் மாவட்டத்திற்கு ஒரு மினி விளையாட்டு அரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். கல்வியில் மட்டுமில்லாமல், விளையாட்டு களிலும் நம்முடைய மாணவர்கள் சாதிக்க வேண்டும் என தொடர்ந்து இம்மாதிரியான திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது.


எனவே இத்தகைய திட்டங்களையெல்லாம் பயன்படுத்தி மாணவர்களாகிய நீங்கள் நல்ல முறையில் கல்வி பயின்று, தேர்ச்சி பெற்று, சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். இவ்வாறு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் த.விஜய லட்சுமி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அலுவலர் உமா மகேஸ்வரன், மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை) ஜெயா, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக் குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் ரவிகுமார், பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர் , உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாண வியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### தர்மபுரி - மொரப்பூர் - சென்னை செல்லும் ரயில்வே திட்டத்திற்கு நிலம்:

# விவசாய நிலங்கள் பாதிக்காதவண்ணம் கையகப்படுத்துவீர்!

### ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் - டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் எம்.பி. கோரிக்கை மனு!



தர்மபுரி, டிச. 26 -

தர்மபுரி மொரப்பூர் சென்னை செல்லும் இரயில்வே திட்டத்திற்கு மூக்கனூர் மற்றும் ஏ.ரெட்டிஹல்லி கிராமங்களில் விவசாயிகளின் நிலங்கள் பாதிக்காத வண்ணம் கையகப்படுத்துக மேலும் வந்தே பாரத் ரெயிலை மொரப்பூர் ரயில் நிலையத்தில் இரண்டு நிமிடங்கள் நிறுத்த வேண்டும் என தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார் ஒன்றிய ரயில்வே துறைஅவர்களை நேரில் சந்தித்து கடிதம் வழங்கி கோரிக்கை விடுத்தார்.

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி என்.வி செந்தில் குமார் ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தர்மபுரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தர்மபுரி மொரப்பூர் சென்னை செல்லும் இணைப்பு இரயில் ரயில் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கி அந்த நிலங்களுக்கு தேவையான இழப்பீடு வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இந்த தர்மபுரி மொரப்பூர் இடையே ரயில் பாதை அமையும் இடத்தில் மூக்கனூர் மற்றும் ஏ.ரெட்டிஹல்லி ஆகிய இரு கிராமங்களில் 6000திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் மேலும் விவசாய மக்களின் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் மற்றும் வீடுகள் இந்த பாதை அமைக்கும் பகுதியில் உள்ளதால் இந்த நிலங்களை கையகப்படுத்தும் பொழுது நிலங்கள் பாதிப்பிற்கு உள்ளாகிறது.

எனவே இரயில் பாதை அமையும் இடத்திலிருந்து சுமார் 600 மீட்டர் அளவிற்கு வேறு பாதையில் இந்த ரயில் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் இந்த இரு கிராம மக்களின் விவசாயிகளின் நிலங்கள் பாதிக்காத வகையில் இந்த ரயில்வே திட்டத்தின் செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் மேலும் தருமபுரி மாவட்டம் மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரயில் நிலையங்களில் பொதுமக்களின் கோரிக்கையான கோவை சூப்பர் ஸ்டார் எக்ஸ்பிரஸ் கன்னியாகுமரி பெங்களூர் எக்ஸ்பிரஸ் பொம்மிடி ரயில் நிலையத்திலும் சென்னை திருவனந்தபுரம் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் கோயம்புத்தூர் திருப்பதி இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் மொரப்பூர் ரயில் நிலையத்திலும் நின்று செல்ல வேண்டும் என்றும் அதுபோல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை மொரப்பூர் ரயில் நிலையத்தில் குறைந்த பட்சம் இரண்டு நிமிடங்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் அவர்களை, செந்தில்குமார் எம்.பி. நேரில் சந்தித்து கடிதம் வழங்கி கோரிக்கை விடுத்தார்.



மயிலாடுதுறையில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் மாநில சிறுபான்மை ஆணையத்தின் துணைத் தலைவர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் நல உதவிகள் வழங்கினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் பா.ஷா வலியுல்லா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.